## நலன்புரிகள் நலன்கள் சபை – 2017

நலன்புரிகள் நலன்கள் சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி நலன்கள் அதிகாரச்சட்டத்தின் 18(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க, எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் தீர்மானிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தை 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவினது (3) ஆம் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 சபையினை தாபித்தல்**

2016 பெப்ரவரி மாதம் 02 ஆந் திகதிய 1952/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் மூலம் 2002 இன் 24 ஆம் இலக்க நலன்புரி நலன்கள் சட்டம் 2016 பெப்ரவரி 13 ஆந் திகதியிலிருந்து அமுலாக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சட்டத்தின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் சட்டத்தின் செயற்பாடுகளுக்காக சட்டத்தை நிர்வகித்தல் மற்றும் சட்டத்தினால் சபைக்கு ஒதுக்கப்பட்டிருந்த அல்லது கையளிக்கப்பட்ட அதிகாரங்களை செயற்படுத்தும் செயற்பாட்டை நிறைவேற்றுவதற்காக கையளிக்கப்படும் நலன்புரி நலன்கள் சபை 2016 யூலை மாதத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. மேலும் சட்டத்தின் 4(அ) பிரிவின் பிரகாரம் நிர்வாக சபையின் தலைவராக நலன்புரி நலன்கள் சபையின் ஆணையாளர் நியமிக்கப்பட்டதுடன் அமைச்சரவையினால் நியமிக்கப்படும் மேலும் நான்கு உறுப்பினர்கள் நிர்வாக சபையின் உறுப்பினர்கள் இருப்பர்.

**1.5 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கம் தவிர நலன்புரிகள் நலன்கள் சபையின் 2017 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 1**

நியமத்தின் பிரகாரம் காலப்பகுதிக்குரிய இனங்காணப்பட்ட சகல வருமானங்கள் மற்றும் செலவினங்கள் உள்ளடக்கப்பட்ட நிதிச் செயலாற்றல் கூற்றொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் செலவினங்கள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டு செலவினக் கூற்றொன்று தயாரிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

நிதியத்தின் 55 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்தொன்று பயன்படுத்துவதற்காக தயார் நிலைக்கு கொண்டு வந்ததன் பின்னர் அச்சொத்துக்களுக்காக பெறுமானத்தேய்வு ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 4,584,793 ஆன கிரயமான சொத்துக்கள் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டில் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் செலவினத் தலைப்பின் கீழ் பெற்றுக்கொண்ட மற்றும் 2017 ஆம் ஆண்டிற்குரியதாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 4,584,793 பெறுமதியான நிலையான சொத்துக்கள் நிதி நிலைமை கூற்றில் சொத்துக்களாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அப்பெறுமதி மூலதன ஒதுக்கீடாக வேறாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் மீண்டெழும் செலவினத்திற்காக கிடைத்திருந்த மற்று் கிடைக்க வேண்டிய மொத்த தொகையான ரூபா 3,253,743 வருமானமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக தவறுதலாக நிதி நிலைமைக்கூற்றில் நிதியளிப்பின் கீழ் உள்ளக்கப்பட்டு மூலதன செலவினமொன்றாக காண்பிக்கப்பட்டு சொத்துக்களுக்கு சேர்க்கப்பட்டிருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

2017 ஒக்தோபர் 02 ஆந் திகதிய பீஈடீ/45 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பான பொறுப்புக்களை காண்பிக்கும் பொறுப்புக்கள் கூற்றொன்று நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

2002 இன் 24 ஆம் இலக்க நலன்புரி நலன்கள் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நலன்களை பெற்றுக்கொள்பவர்களை இனங்காண்பதற்கு முடியுமான வகையில் வெளிப்படையான தன்மையில் தெரிவுசெய்யும் செயற்பாடொன்றை ஏற்படுத்தும் பொருட்டும் அந்நலன்களை முடிவுறுத்துவதற்காக ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டும் அது தொடர்பாக அல்லது அண்மித்த விடயங்கள் தொடர்பாக ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக நலன்புரி நலன்கள் சபை தாபிக்கப்பட்டது. எவ்வாறாயினும் மேற்குறித்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக 2017 ஆம் ஆண்டிற்குரியதாக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அதில் கீழே காட்டப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு சபை தவறியிருந்தது.

(அ) நலன்புரி நலன்கள் சட்டத்தின் பிரகாரம் நலனாளிகளை தெரிவு செய்யும் நியதிகளை மேம்படுத்துவதற்காக நலனாளிகளை தெரிவு செய்யும் முறைமையை பரீட்சித்தல் தொடர்பான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டு அது தொடர்பான அறிக்கையொன்றை தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் இதன் இறுதி மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

எவ்வாறாயினும், நாட்டில் ஏற்பட்ட உள்ளூராட்சி தேர்தல் முடிவடையும் வரை கணிப்பீடு பிற்போடப்பட்டமையால் குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளி விபர திணைக்களத்தின் மூலம் கணிப்பீட்டு பரிசோதனை மாதிரி வழங்கலின் தாமதம் காரணமாக இறுதி பரிசோதனை அறிக்கை 2017 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ள தாமதமானதாக சபை தலைவரால் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது.

(ஆ) நலன்கள் சட்டத்தின் பிரகாரம் நலன்புரி நலன்கள் சபையின் மூலம் முகாமைத்துவம் செய்ய வேண்டிய சகல நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக முழுமையான ஒன்றிணைந்த இலக்ரோனிக் தரவு களஞ்சியமொன்றை மேம்படுத்துவதற்காக 2016 செப்தெம்பர் 28 ஆந் திகதி நலன்புரி சபை, சமூக வலுவூட்டல் நலன்புரி அமைச்சுடன் இணைந்து தகவல் தொழிற்பாட்டு தொழில்நுட்ப நிறுவனத்துடன் (ICTA) புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு வந்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரை உரிய தரவு முறைமை மேம்படுத்துவதற்கான நடைமுறைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

எவ்வாறாயினும், சபை மூலம் முகாமைத்துவம் செய்ய வேண்டிய ஒன்றிணைந்த நலன்புரி நலன்கள் முகாமைத்துவ முறைமை (IWMS) தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் மூலம் தயாரித்து தருவதற்கு பொறுப்பேற்று அந்நிறுவனத்தினால் வேறு 02 நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டிருந்ததாகவும், இச் செயற்திட்டம் 2017 ஒக்தோபர் மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்டு 2018 மே மாதம் அளவில் எட்டு மாதங்களுக்குள் பூர்த்தி செய்து சபைக்கு கையளிக்கப்பட வேண்டிய போதிலும், இக்காலம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கையில் உள்ளடக்கப்படாதிருந்ததாகவும் 2017 ஆம் ஆண்டில் ஒன்றிணைந்த நலன்புரி நலன் முகாமைத்துவ முறைமை (IWMS) முழுமையாக பூர்த்தி செய்து நலன்புரி நலன் சபைக்கு கையளிப்பதற்கு தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு முடியாதிருந்ததாக தலைவரால் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது.

### 3.2 நிதிய குறைபாடு

மீளாய்வாண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 20,100,000 மற்றும் மூலதன செலவினத்திற்காக ரூபா 2,600,000 என மொத்தம் ரூபா 22,700,000 நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் செலவினத் தலைப்பின் கீழ் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தன. இந்த மதிப்பீட்டு நிதி ஏற்பாட்டிலிருந்து நி.பி 66 இன் கீழ் மீண்டெழும் நிதி ஏற்பாடுகளிலிருந்து 03 சந்தர்ப்பங்களின் போது ரூபா 13,000,000 கழித்துக் கொள்ளப்பட்டிருந்ததன் பின்னர் மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 3,241,645 தொகையும் மூலதன செலவினத்திற்காக ரூபா 820,000 தொகையுமாக மொத்தம் ரூபா 4,061,645 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது மதிப்பீட்டு நிதி ஏற்பாட்டிலிருந்து சபையின் திரட்டிய நிதிச் செயலாற்றல் ரூபா 4,061,645 அல்லது 18 சதவீதம் மாத்திரமாக இருந்தது.

நலன்புரி சபையின் பிரதான செயற்பாடான ஒன்றிணைந்த நலன்புரி முகாமைத்துவ முறைமையை (IWMS) தயாரித்தல் தாமதத்தின் பேரில் பதவியணியினரை முழுமையாக ஆட்சேர்ப்பு செய்யும் தேவைப்பாடு உருவாகாமை மற்றும் நிறுவனம் 2017 ஆம் ஆண்டில் நிதி அமைச்சின் உள்ளே பேணிச் சென்ற காரணத்தினால் மூலதனச் செலவினம் மேற்கொள்ள முடியாமையால் நிதியம் குறைப்பயன்பாட்டிற்குட்பட்ட நிதி ஏற்பாடுகளிலிருந்து ஒரு பகுதி நிதி அமைச்சிற்கு நி.பி 66 மூலம் மாற்றப்பட்டிருந்ததாக சபையின் தலைவரால் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது.